**அக்டோபர் - 17**

**"அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டையின் கீழே அடைக்கலம் புகுவாய்." - சங் 91 : 4**

அவர்கள் அவருடைய அன்பின் வெதுவெதுப்பை உணரத்தக்கதாக யேகோவா தன்னிடத்தில் விசுவாசமுள்ள உண்மையான பிள்ளைகளை தனது இருதயத்துக்கு அவ்வளவு பக்கமாகக் கூட்டிச் சேர்க்கிறார். அவர்களுடைய பிரதியுத்தரஞ் சொல்லுகிற இருதயத்தின் பாஷை, "நான் உம்முடைய கூடாரத்தில் (உமது பாதுகாப்பில்) சதாகாலமும் தங்குவேன் ." உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன், ஏனென்றால், நீர் எனக்கு அடைக்கலமும், சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர்." ஏனென்றால் நீர் என் பொருத்தனைகளை (பிரதிஷ்டையை) கேட்டீர். உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்திரத்தை எனக்குத் தந்தீர்." சங் 61: 4, 3, 5, "நானோ உம்முடைய வல்லமையைப்பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடே புகழுவேன். ஏனெனில், எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர்." **- Z ’04, 75 (R 3331)**

இது லவோதிக்கேயா பரிசுத்தவான்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பாதுகாப்பைக் காட்டுவதற்கு, ஒரு இருமடங்கான காட்சி உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒன்று, ஒரு கோழி தன் குஞ்சுகளை அபாயத்திலிருந்து காக்க தன்னுடைய சிறகுகளால் மூடிக்கொண்டிருப்பது. இரண்டாவது ஒரு கழுகு தனது குஞ்சுகளை தனது செட்டைகளால் பாதுகாப்பது. சில அநுபவங்களிலிருந்து நம்மை காப்பதும், மற்ற அநுபவங்களின் மத்தியில் நம்மை பாதுகாப்பதுமான கர்த்தரின் பராமரிப்புகளை கோழியின் சிறகுகள் குறிக்கின்றன. கழுகின் இரு செட்டைகளும் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் குறிக்கின்றன. பழைய ஏற்பாட்டின் முக்கிய விஷயம் இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தல், அதாவது மோசேயின் பாட்டு. புதிய ஏற்பாட்டின் முக்கிய விஷயம் பரம அழைப்பு அதாவது ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டு. இந்த சத்தியங்கள் நம்முடைய பாதுகாப்பியிருக்கின்றன. இவ்விதமாக பரிசுத்தவான்களின் பாதுகாப்பு கர்த்தரின் வார்த்தையினாலும், பராமரிப்புகளாலும் நிச்சயப்படுத்தப்படுகிறது. **- P ’35, 131.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

**ஆதி 15:1; சங் 112:7; 121:6; 124:2,3,7; 141:9; 146:5,6; எண் 23:19; உபா 32:10-12; ஏசா 43:2; மத் 23:37; 2தீமோ 4:18; நீதி 3:21,23,24.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 109 (R 5437).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் தேவனுடைய வசனமும் பராமரிப்பும் என்னுடைய பாதுகாவலாயிருந்ததா? எப்படி? என்ன பலன்களோடு?**